## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்புதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இற்கு முரணாக பணிக்கொடை செலவினமாக ரூபா 1,854,749 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசாக சீராக்கல் மற்றும் செலுத்த வேண்டிய பணிக்கொடை ரூபா 777,426 தொகையான செயற்பாட்டு மூலதனத்தினை மாற்றங்களுக்கான சீராக்கங்களுக்காக ரூபா 1,077,323 தொகையான செயற்பாட்டு நடவடிக்கைகயிலிருந்து உருவாகிய பணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | பணிக்கொடை செலவினம் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் கீழான சீராக்கத்திற்கும் செலுத்த வேண்டிய பணிக்கொடையை செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு சீராக்குவதற்கு இந்த வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் மோட்டார் மதிப்பீடு செய்யப்படாது 4 வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்படும் வகையில் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது. ரூபா 6,390,000 கிரயமுடைய மோட்டார் வாகனமொன்று பயன்பாட்டு ஆயுட் காலத்தை மதிப்பீடு செய்யாதும் மேற்படி பெறுமானத் தேய்விடல் கொள்கைக்கு முரணாகவும், வருடமொன்றிற்கு 6.2 சதவீதம் படி பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது. அவ்வாறே நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. ரூபா 31,565,440 கிரயமான 5 மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டவாறு இருந்த போதிலும், மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு விகிதத்தை எளிமையான முறைமையொன்றினூடாக 25 சதவீதத்துடன் பயன்பாட்டு ஆயுட்காலமானது 04 வருடங்கள் எனுமாறு பெறுமானத் தேய்விடப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது பயன்படு ஆயுட்காலக் கணிப்பீட்டின் தாக்கங்கள் (Impact) சீராக்கம் செய்யப்பட்டு இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த 4 வாகனங்களின் பயன்பாட்டு ஆயுட் காலம் 2018 ஆம் ஆண்டில் மீண்டும் மீள்மதிப்பிடப்பட்டு ரூபா 6,897,500 ஆக மோட்டார் வாகனக் கணக்கில் குறிப்பிடப்பட்டு கணக்கில் குறிப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. | நியமத்தின் விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மோட்டார் வாகனங்களுக்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 126,875 இனால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்த திகதிக்குரிய பெறுமானத் தேய்வு பெறுமதி சரியானதாகும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய சரியான பெறுமானத் தேய்வு பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | தகுதிகாண் காலத்திலுள்ள உத்தியோகத்தர்கள் கற்கை மற்றும் பயிர்களுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படாத போதிலும், தகுதிகாண் காலத்திலிருந்த உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டிருந்தார். | பெண் உத்தியோகத்தருக்கு தனிப்பட்ட வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரிக்கும் போது தாபனவிதிக் கோவையின் 23.4.1 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மிகவும் அவசர தனிப்பட்ட காரணமாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தி | 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வு அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஆண்டறிக்கைகள் கணக்காய்வு திகதியான 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக கையளிக்கப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை எதிர்வரும் காலங்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 2,787,629 ஆன இலாபமொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 1,311,124 ஆகும். அதற்கமைய விளைவுகளில் ரூபா 4,098,753 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. ஆளணி வேதன செலவினம் ரூபா 8,448,921 இனால் மற்றும் மூலதன முதலீட்டுச் செலவினம் ரூபா 5,154,920 இனால் அதிகரித்திருந்த போதிலும், பயிற்சி பாடநெறி வருமானம் ரூபா 2,516,645 இனால் மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்கான திறைசேரி மானியங்கள் ரூபா 17,414,000 இனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவரால் 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,395,749 தொகையான தங்க வெள்ளி மோசடியொன்று தொடர்பில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 750,869 ஆன பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தை அறவிடுவதற்கு வழக்கு தொடர முடியாதென சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளமையால் ரூபா 750,869 தொகையை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அமைச்சின் செயலாளரினூடாக பொதுத் திறைசேரிக்கு குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளது. | உரிய பணத்தை அறவீடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | கூடுதலாக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 619,646 அறவிடப்பட வேண்டிய உத்தியோகத்தர் ஒருவர் மற்றொரு நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பணம் கணக்காய்வு திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூடுதலாக ஒதுக்கப்பட்ட சம்பளங்களான ரூபா 619,646 தொகையினை அறவிடுவதற்கு அவருக்கு எதிராக பிடியாணையொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த உத்தியோகத்தருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிறுவனத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு 2017 நவம்பர் 04 முதல் 10 வரை மில்லியனில் இடம் பெற்ற உத்தியோக பூர்வ சுற்றுலாவிற்காக ரூபா 801,826 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிறுவனத்தின் நிலையமொன்றை மியன்மாரில் நிறுவுதல், அந்நாட்டில் முத்துச்சிற்பினை விளைவிக்கும் அறிவினை இந்நாட்டிற்கு கொண்டு வருவதன் மூலம் அந்நிய செலவானியை ஈட்டுதல் சுற்றுலாவின் பிரதான நோக்கமாகும். நிறுவனத்தின் பணிப்பொறுப்பினுள் உள்ளடங்காத முத்துச் சிப்பி விளைச்சலுக்குரிய அறிவினை இந்நாட்டிற்கு கொண்டு வருவதற்கான வெளிநாட்டு சுற்றுலாவினை அங்கீகரித்திருத்தல் மற்றும் 3 நாட்கள் இடம் பெற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்காக 7 நாட்கள் சுற்றுலாவொன்றினை அங்கீகரித்து 6 நாட்களுக்கான கூட்டினைந்த படியினை செலுத்தியமையால் ரூபா 103,092 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனம் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணத்துறைக்குரிய ஆராய்ச்சி மற்றம் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால், கைத்தொழிலுடன் இணைந்த துறையொன்றான முத்துச் சிற்பிகளின் விளைச்சல் தொடர்பான அறிவு ஆராய்ச்சியாளர்களிடம் காணப்படல் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு முக்கியமானதாகும். சுற்றுலா இடம் பெற்ற 05 நாட்களும் துறைக்குரிய அறிவினை பெற்றுக்கொள்ள முடியும். சுற்றுலாவிற்குரிய திட்டங்களை தயாரிக்கும் போது மொழி தொடர்பான பிரச்சினைகளின் காரணமாக போதியளவான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. என்பதை ஏற்றுக்கொள்கிறேன். நிதிச் சுற்றறிக்கை 01/2015/01 இன் 4(இ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முழுமையான 06 நாட்களுக்காக கூட்டினைந்த படிகள் செலுத்தப்பட்டுள்ளது. | நிறுவன நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், கூடுதலான கொடுப்பனவுகளை மீள அறவிடப்பட வேண்டும். |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமைய ரூபா 2.35 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டு நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சிப் பிரிவில் 3 செயற்பாடுகள் மற்றும் நிர்வாக மற்றும் மனிதவள பிரிவின் 2 செயற்பாடுகள் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நிர்வாக மற்றும் மனிதவள பிரிவின் 2 செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 30.95 மில்லியனில் ரூபா 20.1 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை மற்றுமொரு செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தல், நிதி செலுத்தாமைக்குரிய உறுதிச்சீட்டுக்கள் மற்றும் மூல ஆவணங்கள் நிறுவனத்திற்கு முன்வைக்கப்படாமை மற்றும் திறைசேரி செயற்பாட்டு திணைக்களம் ரூபா 8 மில்லியனை நிதியேற்பாட்டிற்காக அந்த வருடத்தில் வழங்காமை போன்ற காரணங்களின் | செயல் நடவடிக்கைத் திட்டம் நடைமுறைச் சாத்தியமானதாக இருக்க வேண்டியதுடன், அதன் இலக்குகளை அடைவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணமாக செயலாற்றலை அடைய முடியாதிருந்தது.<br><br>ஒட்டுமொத்தமாக 2018 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் 77 சதவீதம் மற்றும் பௌதீக செயலாற்றல் 98 சதவீதம் அளவான செயல் முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. | |
| (ஆ) | இலங்கையினுள் இரத்தினக்கல் கனிய ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடு செய்யும் செயற்திட்டம் | | |
| (i) | பதவியணியினருக்கு ஒப்பந்த அடிப்படையில் 23 ஊழியர்களை இனைத்துக்கொள்ள முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகாரத்தினை வழங்கியிருந்த போதிலும், அந்த ஆட்சேர்ப்புக்கள் இடம் பெற்றிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள மாதாந்த படிகள் போதுமானதாக இல்லாதிருந்தமையால் இனைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காது நிறுவனத்திலுள்ள நிரந்தர பதவிகளினூடாக செயற்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களினால் மேற்கொள்ளப்படும் கோரிகளுக்கமைய ஈடுபடுத்தப்படும் பயிலுனர்களின் ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஆராய்ச்சி பணிகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது. | செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்தின் முதலாவது சட்டத்தின் கீழ் 2017 – 2021 காலப்பகுதியினுள் 5 மாவட்டங்களின் 50 பிரதேச சபை தொகுதியினுள் இரத்தினக் கல் கனிமங்களை தேடி வரைபடங்களை தயாரித்தல் மற்றும் இறுதி அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 2 மாவட்டங்களின் 9 பிரதேச செயலகப் பிரிவுகளில் மாத்திரம் இரத்தினக்கல் புதையல்களின் தேடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு | தனமல்லவிய மற்றும் கதிர்காமம் பிரதேச செயலகப் பிரிவுகளில் தேடுதல் பணிகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் நிறுவனத்திலிருந்து வெளியேறியமையால் இரத்தினகற்கள் புதைந்துள்ள வரைபடங்கள் மற்றும் இறுதி அறிக்கைகளை வெளியிட முடியாதிருந்ததுடன், நிறுவனத்தில் தற்போதுள்ள ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி அந்த பணி நிறைவு செய்யப்படும். பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவின் இரத்தினக்கல் புதையல் | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. அதன் மூலம் 5 பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக மாத்திரம் இரத்தினக்கல் மறைந்துள்ள வரைபடங்களும், 2 பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக மாத்திரம் இறுதி அறிக்கைகளும் வெளியிடப்பட்டிருந்தன. | தேடுதல் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | இறுதி அறிக்கையை வெளியிட்ட 2 பிரதேச செயலக பிரிவுகளில் இரத்தினக்கல் புதையல்கள் உள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட 78 காணிகள் தனிப்பட்ட உரிமையாளர்களிடமும், 44 காணிகள் அரசின் உரித்தின் கீழும் காணப்பட்டது. இனங்காணப்பட்ட அரச காணிகளை ஏலமிடல், மற்றும் வரைபடங்களின் விற்பனை மூலம் வருமானம் உழைக்கும் நடைமுறை தொடர்பில் ஈடுபடுத்தப்பட்டிராததுடன், தனிப்பட்ட காணிகளில் வரைபடங்களின் விற்பனை செய்வதற்குரிய நடைமுறையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தினூடாக இனங்காணப்பட்ட இரத்தினக்கல் காணிகளில் ஏலத்திற்காக ஈடுபடுத்தும் பணிகள் தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையுடன் இணைந்தாக ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமான செயல் முன்னேற்றமொன்று அடையப்பட்டுள்ளது. ஐயபூமி, சுவர்ண பூமி அனுமதிப்பத்திரங்களுடனான காணிகளும் உரிய முறையில் அகழ்தல், ஏலத்திற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை முன்வைக்கப்படுகின்றது.<br><br>தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபைக்கு அனுப்பப்பட்ட 5 பொருத்தமான இடங்களின் உரிய செயற்திட்டத்திற்குரிய – பிரதேசத்தில் சுரங்கம் அமைத்தல் கூடிய விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. | செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பெறுமதி குறைந்த இரத்தினக்கற்களின் நிறம் மற்றும் ஊடுபுகு தன்மையை அதிகரித்தல் மற்றும் மிகவும் பயனுள்ள மற்றும் செயற்திறனான முறைமையான அறிமுகப்படுத்தும் ரூபா 9,975,088 தொகையான 3 வருட செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களினுள் நிறைவேற்றப்பட வேண்டிய Oiling மற்றும் wax coating treatments மற்றும் கொள்வனவு செய்யப்பட வேண்டிய 02 இயந்திரங்கள் | செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் இரண்டு வருடங்கள் நிறைவடைய முன்னர் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. Pressure Vessel உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கான நிதியேற்பாகள் தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டிராமையால் அதற்கடுத்த ஆண்டிற்காக வழங்கப்படும் நிதி உதவிகளின் மூலம் கொள்வனவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2019 ஏப்ரல் மாதம் 30 ஆந் | உரிய செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுத் திகதி வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்திற்கு 2017 ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 4,115,848 தொகையில் ரூபா 2,639,564 தொகையானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலவிடப்பட்டிருக்கவில்லை. | திகதியளவில் ரூபா 3,927,534 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது. | |
| (ஈ) | நிறுவனம் ஆண்டினுள் பாட நெறிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட 1,220 மாணவர்களில் 284 மாணவர்கள் அல்லது 23 சதவீதமானவர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். பொலனறுவை பயிற்சி நிலையத்தில் 2 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக இணைத்துக்கொள்ளப்பட்ட 21 மாணவர்களில் 09 பேர் பாடநெறியை கைவிட்டுச் சென்றிருந்தனர். போதியளவு மாணவர்களின் எண்ணிக்கை இல்லாதிருந்தமையால் பயிற்சி நிலையம் மூடப்பட்டிருந்தது. 40 மாணவர்களை இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த பாடநெறியொன்று நடாத்தப்படவில்லை. | கடந்த வருடங்களுக்கு ஒப்பாக கணக்காய்வாண்டில் பாடநெறிகளை கைவிட்டுச் சென்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறைவான மட்டத்தில் காணப்படுவதுடன், பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களின் சதவீதம் அண்ணளவாக 80 சதவீதமாகும்.<br><br>இரத்தினக்கல் கைத்தொழில் பரந்து காணப்படும் எலஹர மற்றும் பிக்கமூன பிரதேசங்களில் பல்வேறு பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்த போதிலும், பயிலுநர்களை இனங்காணல் பிரச்சினைக்குரியதாக இருந்தது. 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் 132 மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் பிரதேசத்தின் கைத்தொழில் செயற்திட்டத்திற்காக போதுமானதாக காணப்படும்.<br><br>இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண துறையில் பாடநெறிகள் திட்டமிடப்பட்ட போதிலும், கோரிக்கை விடுத்தல் மற்றும் மாணவர்களில் பங்குபற்றல் போதுமானதாக இல்லாதிருந்தமையால் பாட நெறிகள் ஆரம்பிக்கப்படாத போதிலும், எதிர்காலத்தில் பாடநெறிகளை மேலும், அபிவிருத்தி செய்து ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பாடநெறிகளின் மாணவர்களை தக்க வைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2 வாகனங்கள் 9 வருடங்களாகவும் 2 வருடங்களாகவும் விளைவற்றுக் காணப்பட்டது. | கெப் வண்டிகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், மதிப்பீட்டு தொகைக்கு அளவீட்டாளர்கள் முன்வராமையால் விற்பனை செய்ய முடியாதிருந்தது. முற்சக்கர வண்டியுடன் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அல்லது கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன பணியிலான தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 13,000,000 தொகையான நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்து கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிராததுடன், முன்னைய ஆண்டில் திட்டமிடப்பட்ட உபகரணங்களை கொள்வனவு செய்ய ரூபா 8,730,976 செலவிடப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், ஆண்டின் பணம் பெறாமையின் அடிப்படையில் செலுத்த முடியாத மற்றும் பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாத பொருட்களுக்காக 2018 ஆம் ஆண்டில் செலுத்த நேர்ந்தது. | திட்டதிற்கமைய கொள்வனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) பயிற்சிப் பிரிவிற்கு 3 சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக தேசிய போட்டி அடிப்படையிலான விலைக் கேள்வி கோரலுக்கமைய கிடைத்திருந்த விலைக்கேள்விகள் தெளிவான காரணங்களை குறிப்பிடாது நிராகரிக்கப்பட்டு ரூபா 162,552 செலவிடப்பட்டு மீண்டும் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. | மட்டுப்படுத்தப்பட்ட விலைக்கேள்வி கோரல் முறைமையை விட தேசிய போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரல் பொருத்தமானதென முகாமைத்துவம் எடுத்த தீர்மானமொன்றின் அடிப்படையில் மற்றும் பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீள விலைக்கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிறுவனத்தினால் பெறுகைகள் திட்டம் விரிவானதாகவும் பெறுகைகள் வழிகாட்டி 4.2.2 இன் பிரகாரம் பெறுகைகள் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் பெறுகைகள் திட்டம் 2018 யூன் 04 அந் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்கான விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பெறுகைகள் திட்டம் ஆண்டினுள் தயாரிக்கப்பட்டு 2018.02.20 ஆந் திகதி அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்ட போதிலும், அங்கீகாரம் கிடைப்பதற்கு சில காலம் கடந்துள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) பயிற்சிப் பிரிவிற்கு Gemmological Trinocular Stereo Zoom Microscope உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கு ரூபா 275,000 தொகையான கூறுவிலை தொழில் நுட்ப மதிப்பாய்வு கழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள போது பெறுகைகள் குழுவினால் கொள்வனவு நிராகரிக்கப்பட்டிருந்தது. அந்த உபகரணங்களுக்காக இரண்டாவது தடவை கூறுவிலைகள் கோரிய போது கிடைத்திருந்த ரூபா 547,560 தொகையான விலைக்கு பெறுகைகள் கழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் போது குறித்த உபகரணத்தின் 2 அலகுகளை கொள்வனவு செய்யும் போது நிறுவனத்திற்கு நேர்ந்த நட்டம் ரூபா 545,120 ஆகும். 2018 செப்தெம்பர் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிக்குரிய இந்த உபகரணம் 2019 மார்ச் வரையிலும் நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | தொழில்நுட்ப அமைப்புக் குறியீடுகள் உரிய முறையில் இனங்காணப்பட்டமையால் மீண்டும் தொழில்நுட்ப அமைப்புக் குறிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இரண்டாவது தடைவ கூறுவிலை கோருவதற்கு பெறுகைகள் குழு பரிந்துரை செய்யப்பட்டது. அதற்கமைய கூறுவிலைகளை கோரும் போது குறைவான விலை கிடைத்திருந்த தொழில்நுட்ப அமைப்புக் குறியீடுகளை உரிய முறையில் பூர்த்தி செய்த நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்தல் பரிந்துரைக்கப்பட்டதுடன், இரண்டு உபகரணங்களும் தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளன. | தொழில்நுட்ப அமைப்புக் குறியீடுகள் உரிய முறையில் இனங்காணப்பட்டு பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 131 ஆக இருந்ததுடன், அவற்றுள் 58 வெற்றிடமாக காணப்பட்டது. | ஒட்டுமொத்த பதவியணியை இணைத்துக்கொள்ள முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் | பதவியணியின் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு மற்றும் உயர் முகாமைத்துவ மட்டத்திலான |

| | | |
|---|---|---|
| 8 வருடமாக வெற்றிடமாக காணப்பட்ட பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவிக்காக இணைத்துக்கொள்ள கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்ளப்படவில்லை. இது வரையிலும் நிரந்தர பதவியணி 86 ஆக உள்ளதுடன், மேற்படி விலகலினை 36 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவிக்காக இணைத்துக்ொகள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும், தகுதிவாய்ந்த விண்ணப்பங்கள் கிடைக்காமையால் ஆட்சேர்க்க முடியாதிருந்தது. | பதவிகளை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) தயாரிக்கப்பட்டிருந்த கூட்டினைந்த திட்டதினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிதராததுடன், மனிதவள மற்றும் நிர்வாகம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி பிரிவிற்காக மாத்திரம் துறைரீதியான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.<br><br>நிதி இலக்குகள் மற்றும் பௌதீக இலக்குகளை குறிப்பிட்டு செயல் நடவடிக்கைத் திட்டங்களுக்கும் வகையில் செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டம் வருடாந்தம் மூலதன பாதீட்டு நிதியேற்பாடுகளுக்கமைய தயாரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவினராலும் செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பான பொறுப்பு கூறுவதால் நிறுவனத்தின் பிரதான துறையான ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் துறைக்காக மற்றும் ஒத்துழைப்புத் துறையாக கருதப்படும் நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவிற்குரிய துறைவாரியான செயல் நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்து செயற்பாடுகளுக்கும் உரிய பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. | உரிய முறையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், செயலாற்றல் அறிக்கைகளில் உரிய முறையில் இலக்குகள் மற்றும் செயலாற்றல் காண்பிக்கப்பட வேண்டும். |